யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 மார்கழி 10 புதன்கிழமை (25-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 29

04 JAN 1997

# இனப்பிரச்சினை பற்றி பேச்சு நடத்த சந்திரிகா இந்தியாவுக்கு திடீர் விஜயம்

## பிரதமர் கௌடாவுடன் பேசுவாரா?

கொழும்பு, டிசம்பர் 25

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இந்தியாவுக்குத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு- நேற்றுக் காலை புதுடில்லிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

ஜனாதிபதியின் விஜயம் தனிப்பட்டது என்று தெரிவிக்கப் பட்டாலும் அவர் இனப்பிரச்சினை விவகாரம் குறித்து முக்கிய பேச்சுக்களை நடத்துவதற்காகவே இந்தியா சென்றுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்புக் காரணங்கள் கருதி ஜனாதிபதியின் விஜயம் வெகு இரகசியமாக வைக்கப் பட்டிருந்தது. சந்திரிகாவுடன் அவரின் இரண்டு பிள்ளைகளும் கூடச் சென்றுள்ளனர்.

இதே வேளை, சார்க் அமைச்சர்கள் மட்ட மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், மாநாடு முடிந்த பின்னரும் இந்தியாவில் தங்கி நிற்கிறார்.

ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்து, விடுதலைப் புலிகள் பெயர் குறிப்பிடப் படாத மத்தியஸ்தர் ஒருவர் மூலம் தகவல் அனுப்பியிருந்தனர் என்றும் —

அதனைத் தொடர்ந்தே சந்திரிகா இந்தியாவுக்குத் திடீர் விஜயத்தை மேற்கொண்டிருப்பதாகவும் — புதுடில்லிப் பத்திரிகைகள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வல்வையில் சண்டை

கொழும்பு, டிச. 25

வல்வெட்டித்துறையில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் காலை சண்டை இடம் பெற்றதாகவும் —

சண்டையின் பின்னர் அப்பகுதியில் இடம்பெற்ற தேடுதலின் போது ஆயுதங்கள், வெடிமருந்துப் பொருள்களுடன் புலிகள் உறுப்பினர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டதாகவும் —

கொழும்பில் அறிவிக்கப் பட்டது. (உ-3-4)

## 37,000 அரச ஊழியர் ஒன்றாகவிலகுகின்றனர்

கொழும்பு, டிச. 25

அரச சேவையில் இருப்போர் 55 வயதைப் பூர்த்தியடைய முன்னர் தமது விருப்பப்படி ஓய்வு பெறுவதற்கு வசதியளிக்கும் 44/90 இலக்க சுற்றறிக்கையை இந்த மாதத்துடன் விலக்கிக் கொள்ள அரசு முடிவு எடுத்திருப்பதை அடுத்து —

அரச சேவையிலிருந்து ஓய்வு பெற 37 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருக்கின்றனர் என செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டது.

இருபதுவருட அரச சேவையைப் பூர்த்தி செய்த ஊழியர் ஒருவர் தான் கடைசியாகப் பெற்ற சம்பளத்தின் 90 வீதத்தை ஓய்வூதியமாகப் பெற மேற்படி சுற்றறிக்கை வழிவகுத்தது.

அது விலக்கிக் கொள்ளப் பட்டால் —

அதன் பின்னர் ஓய்வு பெறும்போது ஓய்வூதியம் குறைவாகக் கிடைக்கும் என்பதாலும் —

55 வயதுக்கு முன்னர் தமது விருப்பப்படி ஓய்வு பெற முடியாது என்பதாலும் —

பல அரச ஊழியர்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இரு பொலீஸார் அம்பாறையில் பலி!

கொழும்பு, டிச. 25

அம்பாறை நகரில் இருந்து சுமார் 12 கிலோ மீற்றர் வடக்கே 16 ஆவது கொலனியில் உள்ள பொலீஸ் நிலையத்தின் மீது நேற்றுக் காலை 7.30 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இத்தாக்குதலில் இரு பொலீஸார் பலியாகியுள்ளனர்; மற்றொரு பொலீஸார் படுகாயமுற்றார். மற்றும் இரண்டு பொலீஸார் காயமுற்றனர்.

சுமார் ஒரு மணி நேரம் சண்டை நீடித்தது. விமானப் படையினரின் உதவியுடன் பதில் தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து பலத்த இழப்புகளுடன் புலிகள் பின்வாங்கியதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. [உ-3-4-10]

## 10 ஆயிரம் பொலீஸார் ஓய்வு பெற முயற்சி!

கொழும்பு, டிச. 25

அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுவது தொடர்பாக அரசு விடுத்துள்ள புதிய அறிவிப்பை அடுத்து பொலீஸ் சேவையில் இருந்து மட்டும் பத்தாயிரம் பேர் ஓய்வு பெற விண்ணப்பித்திருப்பதாகச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

அரச படைகளுக்கு ஆள் சேர்க்கும் முயற்சியில் அரசு மும்முரமாக ஈடுபட்டுள்ள இந்தச் சமயத்தில் பத்தாயிரம் பொலீஸார் ஓய்வு பெற விண்ணப்பித்துள்ளமை அரசின் முயற்சிகளை மேலும் பாதிக்கும் எனத் தெரிவிக்கப் படுகின்றது. (உ-10)

## இலங்கை, இந்திய அரசுகள் மீது வழக்குப் போடுவதில் டக்ளஸ் விடாப்பிடி!

கொழும்பு, டிச. 25

இலங்கை — இந்திய ஒப்பந்த ஷரத்துக்களை நடைமுறைப்படுத்தக் கோரி இலங்கை, இந்திய அரசுகள் மீது வழக்குத் தாக்கல் செய்வது என்ற முடிவை எந்த நிர்ப்பந்தம் வந்தாலும் மாற்றப் போவதில்லை என்று ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா "த ஐலண்ட்" பத்திரிகைக்கு தெரிவித்தார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் 154வது சரத்தின் படி நடவடிக்கை எடுக்குமாறு இரு அரசுகளையும் நிர்ப்பந்திப்பதே இந்த வழக்குத் தாக்கல் செய்யப் படுவதன் நோக்கம் என்றார் அவர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப ... ... கொண்மேந்து உத்தியோகத்துக்கு கூண்டோடு கோவிந்தா எண்டு சொல்லுங்கோ ... ...!

## முல்லையில் ஒதுங்கிய சடலங்கள்: செய்தி குறித்து படையினர் விளக்கம்

யாழ்ப்பாணம், டிச. 25

மூன்று மாணவியரின் சடலங்கள் முல்லைத்தீவுக் கடலோரப் பரப்பில் கரை ஒதுங்கியதாகக் கூறப்படுவது தொடர்பாக 'சடலங்கள் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியரது அல்ல' என்ற தலைப்பில் யாழ். இராணுவ வட்டாரங்கள் செய்திக் குறிப்பு ஒன்றை நேற்று வெளியிட்டன. அதன் முழுவிவரம் வருமாறு:-

டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையில் மூன்று மாணவியரது சடலங்கள் முல்லைக் கடலில் கரை ஒதுங்கின என்றதலைப்பின் கீழும்—

டிசம்பர் 19 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் 'முல்லையில் ஒதுங்கிய சடலங்கள்; விசாரணை நடத்தப்

(2 ஆம் பக்கம் பார்க்க)



அனைவருக்கும் உதயனின் நத்தார் நல்வாழ்த்துக்கள் உரியனவாகுக!

## நத்தார் செய்தி

### யாழ். ஆயர்

யாழ். மறை மாவட்ட ஆயர் அதி. வண. தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் விடுத்துள்ள நத்தார் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

மனித குலத்துக்குப் பல்வேறு அடிமைத் தனங்களில் இருந்து விடுதலை அளிக்க இயேசுக்கிறிஸ்து மனிதனாகப் பிறந்த விழாவை நத்தார் எனக் கொண்டாடுகிறோம்.

பிளவுபட்டு, துன்புறும் மனிதனுக்கு அமைதியும் சமாதானமும் உண்டாவ

(7 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். எம். பி.

ஈ. பி. டி. பியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் யாழ். மாவட்ட எம். பியுமான திரு. ஆர். இராமேஸ்வரன் (மதன்) விடுத்துள்ள நத்தார் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காகவும், நலிந்த மக்களின் மேம்பாட்டுக்காகவும் தன்னை அர்ப்பணித்த மனுமகன் யேசுபிரான் பிறந்த நாள் இன்றாகும்.

மக்கள் சமாதானமாகவும் அமைதியுடனும் சுதந்திரத்து

(7 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். தளபதி

யாழ்ப்பாணத்தில் உள்ள 51 ஆவது படைப் பிரிவின் முன்னாள் தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா யாழ்ப்பாண மக்களுக்கு விடுத்துள்ள நத்தார் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

"உங்கள் அனைவருக்கும் எனது இனிய நத்தார் வாழ்த்துக்கள். உங்களுடன் நான் பணியாற்றிய குறுகிய காலத்தில் எனது கடமைகளைச்

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நத்தார் வாழ்த்துக்கள்

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்

எம் இதயம் கனிந்த
நத்தார் வாழ்த்துக்கள்!

## அஜந்தாஸ்
## ரெக்ஸ்ரைல்ஸ்

54, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

25, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(44254)


## யாழ். சேகர மெதடிஸ்த திருச்சபை
### ஆண்கள் (நயில்ஸ் இல்லம்)
### பெண்கள் (அருள் வாசா)

மேற்படி விடுதிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்காக அனுமதி கோரி விண்ணப்பம் அனுப்பியவர்களும், அனுமதி தேவைப்படுவோரும் 27-12-96 வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு இல. 120, இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாண இல்லத்தில் சந்திக்கவும்.

- முகாமைக்குரு

(44312)

## கண்ணீர் அஞ்சலி


பிரதம பொறியியலாளர்
தேவராசனின் தந்தை
வேலுப்பிள்ளை நடராசாவின்
மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலிகள்!

சி, பிரபாகரன்
செ. செக்ஸ்ரஸ்

யாழ். போதனா வைத்தியசாலை.

(சி/3797)

## 5-வது பிறந்ததின நினைவுகூரல்



### செல்வி தனுஷா கணேந்திரன்

இம்மையில்:
25 - 12 - 1992

மறுமையில்:
07 - 05 - 1995

கையில் மலர் எடுத்து
கருத்தில் நிலை நிறுத்தி
மழலை முகம் தேடுகின்றோம்
காற்றாய் மூச்சாய் எங்கும் உன் உருவே
படைத்தவன் தேவையென்று பாதியில்
அழைத்து விட்டால்
வளர்த்தவர் அழுதாலும் வருவாரோ
போனோர்கள்?

என்றும் உன் நீங்கா நினைவுடன்
அப்பா, அம்மா,
அக்கா தாரகா.

அ. கணேந்திரன்
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(சி/3794)

## முல்லையில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படவேண்டும்' என்ற தலைப்பின் கீழும்—

வெளியான செய்திகள் குறித்து உண்மை பொய்யைக் கண்டறிவதற்காக சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபரைச் சந்திப்பதற்கு இராணுவ அதிகாரிகள் ஒழுங்குகளை மேற் கொண்டனர்.

அதன்போது —

கிருஷாந்தி குமாரசுவாமி என்ற மாணவியைத் தவிர இதுவரை வேறு எந்தவொரு மாணவியும் காணாமல் போயுள்ளமை குறித்து பெற்றோர்களாலோ, உறவினர்களாலோ முறைப்பாடுகள் முன்வைக்கப்படவில்லை; பாடசாலைக்கு வரும் எந்தவொரு மாணவியும் காணாமல் போகவில்லை: அப்படிக் காணாமல் போனதாக எந்தவித தகவலும் தமக்குக் கிடைக்கவில்லை. — என்று அதிபர் தெரிவித்துள்ளார்.

இது பற்றிப் பேசிய போது ஏனையோரும் இதே போன்ற கருத்துக்களைத் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

தமது பாடசாலை இலச்சினையை ஒத்த இலச்சினை வேறெந்தப் பாடசாலைக்கும் இல்லை எனவும் —

அந்தச் சடலங்களின் கழுத்துப் பட்டியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் இலச்சினை காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்றும் —

அத்தகைய சம்பவம் ஏதும் நிகழ்ந்திருக்குமேயானால் முதலில் அறிந்து கொள்ள வேண்டியவர் பாடசாலை அதிபரான தாமே என்றும் —

அது தொடர்பான முறைப்பாடும் தம்மிடமே செய்யப்பட வேண்டும் என்றும்—

ஆனால் இது தொடர்பாக வெகுசனத் தொடர்பு சாதனங்கள் மூலமே தாமும் அறிந்து கொண்டதாகவும் —

அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் தெரிய வருவது என்னவென்றால் —

கரைஒதுங்கிய பெண்களின் சடலங்கள் தொடர்பான குற்றங்களைப் படையினர் மீது சுமத்தி இராணுவத்தினரை அவமானப்படுத்தும் நோக்குடன் தேசிய, சர்வதேச மட்டத்தில் ஏதாவது ஒரு பிரசாரத்தை மேற்கொள்ளும் திட்டம் இது என்பதாகும்.

இதேபோன்று புலிகளால் சர்வதேச தகவல் நிலையத்துக்கும் இது தொடர்பான போலித் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படை நோக்கமாக இருப்பது பாதுகாப்புப் படையினரை அவமானப்படுத்துவதே என்பது தெட்டத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆசிரியர் குறிப்பு

1. டிசம்பர் 13 ஆம் திகதி பிரசுரமான மேற்படி உதயன் செய்தியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி குறித்து எதுவும் பிரஸ்தாபிக்கப்படவில்லை. ஆனால் அதேதினம் கொழும்பில் வெளியான பத்திரிகைகள் மற்றும் செய்திகளில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி சமுத்துப்பட்டி மற்றும் இலச்சினை குறித்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2. இந்த விடயம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம், ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் இலச்சினையும், கழுத்துப் பட்டியும் சடலங்களில் ஒன்றில் காணப்பட்டன என்று கூறப்படுகின்றது எனத் தெரிவித்துள்ளார். அக்கடிதத்தின் விவரம் டிசம்பர் 15 ஆம் திகதி கொழும்புப் பத்திரிகைகளில் பிரசுரமாயின. அச்செய்தி டிசம்பர் 19 ஆம் திகதி உதயனில் மறு பிரசுரம் செய்யப்பட்டது.

(ஆ-ர்)


## சிவசக்தி பொத்தகசாலை

பாடசாலை உபகரணங்களை நியாய விலையில்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்:

சிவசக்தி பொத்தகசாலை அன்ட் ஸ்ரோர்ஸ்,
21, டச்சு வீதி, சாவகச்சேரி.

(சி/ 3796)


# மரண அறிவித்தல்கள்

## தம்பிப்பிள்ளை விக்கினேஸ்வரன் (பிள்ளையார்)

மல்லாகம் காளிகோயிலடியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை விக்கினேஸ்வரன் (பிள்ளையார் – முன்னாள் உரிமையாளர், விக்கினேஸ்வரா கடைச்சல் தொழிற்சாலை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) 24-12-96 செவ்வாய்க்கிழமை அதிகாலை தாவடியில் காலமானார்.

அன்னார் இந்திராணியின் அன்புக் கணவரும், சர்மதாசன் (பிரான்ஸ்), சாந்தினி (பிரான்ஸ்), சுகந்தினி (ஜேர்மனி), சுகுணதாசன், ஜெயந்தினி, றோகினி, லோகினி ஆகியோரின் அன்புத்தந்தையும், சரஸ்வதி, இலட்சுமிப்பிள்ளை, கதிரமலை, காலஞ்சென்ற கிட்டினர் மற்றும் வள்ளிப்பிள்ளை, நல்லம்மா (நைஜீரியா), நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் தற்போதைய முகவரியான காளிகோயிலடி தாவடியில் இன்று (25-12-96) புதன்கிழமை பகல் 1 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. ஜெயராசன் (அப்பன்)
(மருமகன்)

காளிகோயிலடி,
தாவடி வடக்கு.

(44315)

## முத்துச்சாமி மகாலிங்கம்

(உரிமையாளர், வின்சிலோஸ் கராஜ்,
149, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்)

53, பெரியதம்பிரான் கோயில் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட முத்துச்சாமி மகாலிங்கம் கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-12-96) புதன்கிழமை அவருடைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ச. சாந்தன்
(மருமகன்)

53, பெரியதம்பிரான் கோயில் வீதி,
வண்—மேற்கு,
யாழ்ப்பாணம்.

(9115)

## முருகேசு பாலசுப்பிரமணியம்

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும், பொன்னாவளை, களபூமி காரைநகரில் வசித்தவருமாகிய முருகேசு பாலசுப்பிரமணியம் மல்லாவியில் காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், நாகராசா, கனகேஸ்வரி, கனகராசா, காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் சற்குணராசா, விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சறோஜினிதேவி, சிவனேசராசா, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, பரமலிங்கம், கமலாதேவி, நவரத்தினம் மற்றும் லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மல்லாவியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
பா. நாகராசா
(மகன்)

(44313)

## திருமதி இராசமணி இராசதுரை

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருமதி இராசமணி இராசதுரை 96 - 12 - 24 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா - பாக்கியம் ஆகியோரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும், அருந்ததி (ஜேர்மனி), ஸ்ரீஸ்கந்தராசா, மனோரஞ்சினி, ஸ்ரீவிக்கினேஸ்வரராசா, செல்வகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் லட்சுமிகாந் (ஜேர்மனி) குகானந்தன், கிரிஜா, ஸ்ரீரஞ்சினி, ரஞ்சி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் பூரணம், காலஞ்சென்ற கனகரத்தினம் (மக்கள் வங்கி உதவி முகாமையாளர்), ஆனந்தராசா (சுவிஸ்), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சஞ்சீவ்காந், றஜீவ்காந், நிரஞ்சன், நிசானா, நீருஜா, நிரஞ்சலா, நிரோஜன், விபூஷன், தீபிகா, நிதுஷன், நிகேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரது பூதவுடல் 96-12-25 இன்று காலை 11.00 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

56/1 ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

(9116)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார்-மீட்பின் பெருவிழா

'எதிர்பார்ப்பது' மனித இதயத்தின் தனியாத தாகம். இன்று நாம் பல எதிர்பார்ப்புக்களோடு வாழ்கின்றோம். துன்பங்கள், கஷ்டங்கள், மன வேதனைகள் இவை அனைத்திலுமிருந்து உண்மையாக விடுதலை பெற்று நிறைவான மகிழ்வோடு, மன அமைதியோடு வாழ வேண்டுமென்று ஒவ்வொருவருடைய உள்ளமும் எதிர்பார்த்து விடிவை எண்ணி காத்துக் கொண்டிருக்கின்றது.

'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்'. பபிலோனியர் யெருசலேமையும் அதன் திருத்தலத்தையும் அழித்துக் சாம்பராக்கினர். இஸ்ராயேலர் இறைவனுடைய உடன்படிக்கையிலிருந்து தவறினர். தம் உள்ளங்களைக் கடினமாக்கிக் கொண்டு பாவச் சேற்றிலே புரண்டனர். பாவம் செய்தோம்; அவற்றிலேயே நெடுங்காலமாய் உழல்கிறோம் என்று கண்ணீர் விட்டனர்.

புதிய வாழ்வை எதிர்பார்த்து தங்கள் நிலையை எண்ணி அழுதார்கள், தங்களுக்கு மீட்பு கிடைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். எனவே 'வாரும் ஆண்டவரே வாரும் என்று தொடர்ந்து செபித்தார்கள். நீரே எங்கள் தந்தை; நீரே எங்கள் மீட்பர்; எங்கள் பக்கமாய்த் திரும்பியருளும். வானத்தைக் கிழித்து நீர் இறங்கி வரமாட்டீரா? உம்மைப் போன்று செயலாற்றும் கடவுள் உண்டா என்று கதறி அழுகின்றனர்.

நாம் இன்று எதிர்பார்க்கும் அன்பு, நீதி, சமாதானம் — இவை நம் உள்ளங்களிலும், இல்லங்களிலும், ஊரிலும், நாட்டிலும் வருகை தர வேண்டுமாயின் – அவருடைய அரசு நம்மை முழுமையும் ஆட்கொள்ள வேண்டுமாயின் ஆழ்ந்த நம்பிக்கையுடன் நாமும் 'கடவுளின் மீட்பு' என்ற பெயர் கொண்ட இயேசுவிடம் கதறி அழுவோம்.

கண்ணீருக்கு பொருள் உண்டு, பிள்ளையின் அழுகுரல் கேட்டு தாய் ஓடி வருவது போல், எம் குரல் கேட்டு நிச்சயம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வருவார் என்ற நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக் காத்திருப்போம். எங்களுக்கும் மீட்பு நிச்சயமாக உண்டு; இதுதான் மீட்பின் பெருவிழா; நத்தார் விழா.

மெசியா பிறந்தது ஒரு வரலாற்று நிகழ்வு. இன்று அது எம் ஆன்மீக நிகழ்வு. இன்று நாம் எமது பழைய நிலைகளிலிருந்து விடுபட்டு புதிய உள்ளத்துடன், உணர்வுடன் வாழும் பொழுது மெசியாவின் பிறப்பு எம்மில் நடந்தேறுகின்றது.

அருட்திரு. சாள்ஸ் கொலீன்


நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு
எமது நத்தார் - புத்தாண்டு
வாழ்த்துக்கள் உரித்தாகுக.




ராசி பட்டுச் சோலை
(Rasi Silks)
70, 71 A நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.



அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையார்ளகள் அனைவருக்கும்
எமது
நத்தார், புதுவருட
நல் வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.




542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## பாலன் பிறந்தான்

பாலன் யேசு
பாரினில் உதித்தனன் – நம்
பாவங்கள் தீர்த்திடவே
பட்டியில் பிறந்தனன்
பனிகாலத் திங்களில் - அங்கு
பலருக்கு விண்மீன் காட்டியே
பாவிகள் திருந்திடப்
பரவசம் கொண்டவன் - பல
பாதைகள் காட்டினனே
பாமரர் நாமே
பரமனை என்றும் - நன்கு
பாடி மகிழ்வோமே

—இ. விஜயரத்தினம்



## நத்தார் தாத்தா வருகிறார்!

சுழன்று கொண்டிருக்கும் பூமிக்குள் மீண்டும் ஒரு நத்தார் விழாவினை இன்று அனைத்து மக்களும் கொண்டாடுகிறார்கள். கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே என்றிருந்த இந்த விழா இன்று இன, மத வேறுபாடுகளுக்கப்பால் அனைத்து மக்களுக்குமான விழாவாக மாறியிருப்பதில் வியப்பேதுமில்லை.

கிறிஸ்து உலக மக்கள் அனைவருக்காகவும் பிறந்

(5ஆம் பக்கம் பார்க்க)

## யேசுவை இறைஞ்சுவோம்

மார்கழி மலர்ந்தது மனங்களும் மகிழ்ந்தன
மாரியில் கடுங்குளிர் காற்றினில் கலந்தது
நாடுமே உறங்கையில் பாலனும் பிறந்திட
நல்லதோர் சேதியும் விடிந்திடப் பரந்தது
பாவிகள் துயர்தனைத் துடைத்திடும் ஆயனாய்
பாலனின் பார்வையும் தரணியில் பதிந்தது
இனிவரும் ஆண்டினில் நல்லதோர் வாழ்வினை
ஈந்தருள் வாரென யேசுவை இறைஞ்சுவோம்

- கே. ஆர். திருத்துவராசா

## நல்லாசி பொழிவாயே!

''உன்னதங்களிலே இறைவனுக்கு
மகிமை உண்டாகுக — உலகினில்
அவர் தயவு பெற்றவர்க்கு
அமைதியும் ஆகுக'' என்ற
வானவரின் இசையமுதம்
வான் அதிர ஒலித்ததுவே.
சோதிப் பிழம் பொன்று
சொன்ன வழி சென்றுமங்கே
மாசறு குழந்தையினை
மாட்டுக் குடிலிடையே
மண்டியிட்டு வணங்கினரே.
மானிடத்தை மீட்டிடவே
மனுவானார் இறைமகனார்
மாபாவம் கழுவிப் போக்கி
மன்னவனே உன் அருளொளியை
மனிதர் மனங்களில் பரப்பிடுவாய்.
நல்ல செய்தி தாராயோ
நாதனே உன் பிறப்பால்
நாமெல்லாம் ஒன்றாகி
நானிலம் அமைதி பெற
நல்லாசி பொழிவாயே!

— நெடுந்தீவு மன்ரேசா



## திருமறையின் நாயகனே!

தேவாதி தேவா!
தேவுலகின் மைந்தா!
நேரான செங்கோல்
நிலைக்க வந்த பெருமானே!
பாதம் பணிந்து வந்தோம்
சேயர் எமை மீட்டருளும்.
மனிதனிலே புனிதனாக
மண்ணில் வந்த மாணிக்கமே!
மாசு மறு இல்லாத — மனித
மாண்புடைய சமுதாயம் — இம்
மாநிலத்தில் உருவாக — எம்
மனங்களிலே பிறந்துவிடு.
ஏழ்மையிலே உதித்தவனே!
ஏழைகளின் காவலனே!
நீதியோடு சமாதானம்
நாம் பெற்று வாழ்வுயர
திருமறையின் நாயகனே!
மறுமுறையும் பிறந்துவிடு.

— கொழும்புத்துறை எஸ். யேசுதாஸ்.


நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்களுக்கு
எமது
நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்
யாழ். விவசாயிகளே!
உங்களுக்கு வேண்டிய 'லங்கெம்' தயாரிப்புகளான
★ கிருமி நாசனி ★ களை நாசனி
★ அற்றோனிக் புதிய பயிர் ஊக்கி
மருந்துகளை யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ள ஏக விநியோகத்தர்கள்.:
துர்க்கா களஞ்சியம்
95/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.




லாவண்யா
பல் மூக்குக்
கண்ணாடி அகம்

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்
சிறந்த முறையில் பல் கட்டுவதற்கும், மூக்குக் கண்ணாடிகளைப் பெறுவதற்கும்
லாவண்யாவிற்கு வாருங்கள்.
செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் யாழ். வீதி, (மகாத்மா தியேட்டர் அருகில்)
நெல்லியடி (கிளை)
காலை 8-00 மணி முதல் 12-00 மணி வரை
ஞாயிறு தவிர்ந்த எல்லா நாள்களிலும் பஸ் நிலையம் முன்பாக.
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
டாக்டர் றெஜி [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுவார்த்தை நடத்த சரியான நேரம் இதுதான்

## கூட்டணித்தலைவர்தெரிவிப்பு

கொழும்பு, டிச. 25

புலிகளின் உறுதியான தன்மையை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் புலிகள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய நல்ல கால கட்டம் இதுதான்.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அரசின் தீர்வு யோசனைகளை விடுதலைப் புலிகள் ஏற்கத் தயாராக இல்லை என்பதும், இதனால் பிரயோசனம் ஏற்படாதென அவர்கள் நினைப்பதாகவும் தெரிகிறது.

தீர்வு யோசனையை இந்த அரசாங்கம் அமுல் நடத்த மாட்டாதென அவர்கள் கருதுகிறார்கள்.

முன்னைய அரசாங்கம் மாதிரி இந்த அரசாங்கமும் இறுதி நேரத்தில் பின்வாங்கும் என்ற நம்பிக்கையீனமே இதற்குக் காரணமாக இருக்கலாம்.

இவ்விடயத்தில் உறுதியான, நிரந்தரமான தீர்வு வேண்டுமானால் புலிகளுடனும் பேச்சு நடத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

புலிகளின் திறமையைய, கொள்கைப்பற்றை, வீரத்தை மெச்சுகின்ற அதே நேரத்தில் அவர்கள் ஒரு காலகட்டத்தில் பேச்சுக்கு வர வேண்டியிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பேச்சுவார்த்தை சூழ்நிலைக்குள் சமாதான வழிகளை திறந்து விடுவதற்கான சிறந்த சந்தர்ப்பம் இதுதான்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## திருநெல்வேலியில்
# செயற்கை முறை சினைப்படுத்தும் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பம்

திருநெல்வேலி செயற்கை முறை சினைப்படுத்தும் நிலையம் நேற்று முன்தினத்திலிருந்து மீண்டும் தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

காளைகளில் இருந்தும், நல்லின ஆட்டுக் கடாக்களில் இருந்தும் பெறப்படும் விந்து குளிரூட்டிகளில் சேகரிக்கப்படுகிறது.

இவ்விந்து கால்நடைகளை சினைப்படுத்துவதற்காக யாழ். மாவட்டத்திலுள்ள கால்நடை வைத்தியசாலைகளுக்கும், வைத்திய பணிமனைகளுக்கும் தற்போது அனுப்பப்பட்டு வருகிறது.

ஆடு, மாடு வளர்க்கும் பண்ணையாளர்கள் தங்கள் பகுதி கால்நடை வைத்திய பணிமனைகளுடன் தொடர்பு கொண்டு செயற்கை முறை சினைப்படுத்தலை மேற்கொள்ளலாம் என பதில் செயற்கை முறை சினைப்படுத்தல் அலுவலரும், கால்நடை அத்தியட்சகருமான டாக்டர் எம். தங்கராசா கேட்டுள்ளார். [இ-4]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 20 — 06 — 1938

உதிர்வு: 25 — 11 — 1996

### அமரர் கந்தையா கனரத்தினம்

பூதர்மடம், நீர்வேலி.
(ப. நோ. கூ. ச. ஊழியர்)

பாசமுள்ள எங்கள் அப்பாவே!
நாள்கள் 31 சென்றதையா!
பாசமுள்ள எங்கள் குடும்பத்தின் விளக்கே!
கொழும்பால் உங்கள் வரவை ஆவலுடன்
எதிர்பார்த்தோமே
உங்கள் நினைவினை என்றும் மறப்பதற்கில்லை.
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

பிரிவால் வாடும்:
**மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.**

அப்பிளானை,
கோப்பாய் மத்தி.

(9110)

## பாடசாலைகளில் பற்சிகிச்சை நிலையங்கள்

வலிகாமம் தெற்கு, டிச. 25

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் பாடசாலை மாணவர்களுக்கான இலவச பற்சிகிச்சை நிலையம் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தற்காலிகமாக செயற்பட்டு வந்த மேற்படி நிலையத்தின் சிகிச்சை தொழிற்பாடுகள் மீண்டும் இம்மாதம் 17 ஆம் திகதியில் இருந்து இராமநாதன் கல்லூரியில் ஆரம்பமாகியுள்ளன.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் இயங்கிய பற்சிகிச்சை நிலையம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும் பருத்தித்துறை— உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலும் இது போன்ற பற்சிகிச்சை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

பதின்மூன்று வயதுக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்கள் விடுமுறையைப் பயன்படுத்தி தமது பற்களைப் பரிசோதித்து சிகிச்சை பெற பெற்றோர்கள் கவனம் செலுத்தவேண்டுமென பற்சிகிச்சை நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (இ-152)

## உடல் ஊனமுற்றோருக்கு அன்பளிப்புப் பொருள்கள்

வலிகாமம் தெற்கு, டிச. 25

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவு சங்கம், தென்னை-பனை வள அபிவிருத்திசபை, கலைவளர்ச்சிகழகம், மற்றும் லயன்ஸ் கழகம் ஆகியவற்றால் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பல உடல் ஊனமுற்ற மக்களுக்கு அன்பளிப்பு பொருள்கள் வழங்கப்பட்டன.

சர்வதேச உடல் ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தினால் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடத்தப்பட்ட விழாவில் வைத்து இந்த அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது.

உலகளாவிய ரீதியில் 9 சதவீதமான மக்களும், இலங்கையில் சுமார் 9 இலட்சம் மக்களும் உடல் ஊனமுற்ற நிலையில் உள்ளனர். மேலை நாடுகளில் இவ்வாறானவர்கள் இலகுவாக தமது கருமங்களைச் செய்யக் கூடிய முறையில் கட்டடங்களை அமைத்துள்ளனர். அது போல் இங்கும் கட்டட அமைப்புக்களை ஏற்படுத்த வேண்டுமென பிரதேச செயலர் தலைமையுரையின் போது குறிப்பிட்டார்.

பிரதேச செயலர் பிரிவினரால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, லயன். தங்கராசா, இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் திரு. செபநாயகம், பிரதி கல்விப்பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா உட்பட பலர் கருத்துரை வழங்கினர்,

வலி - தெற்கு பிரதேச செயலக திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு. த. தேவராஜன் விழா ஒழுங்குகளை செய்திருந்தார். (இ-152)

## ஒளி விழா

யாழ்ப்பாணம், டிச. 25

ஊர்காவற்றுறை மக்கள் வங்கி- தபால் காரியாலய நலன்புரிச் சங்கங்கள் இணைந்து நடத்தும் ஒளி விழா நாளை வியாழன் பிற்பகல் ஒரு மணிக்கு மக்கள் வங்கிக் கட்டடத்தில் நடைபெறும். (இ)

★ ★ ★

யாழ். சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் ஒளி விழாவும், பரிசுத் தினமும் நாளை வியாழக்கிழமை காலை 9. 30 மணிக்கு சென் ஜேம்ஸ் மகாவித்தியாலய அமரர் றோமான் அரங்கில் வித்தியாலய அதிபர் எஸ். எஸ். தங்கராசா தலைமையில் நடைபெறும். (இ-51)

## மருந்து விலை

குருநகர், டிச. 25

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் மருந்துக் கடை ஒன்றுக்கு கப்பல் மூலம் மருந்துகள் எடுத்து வரப்பட்டதனால் தற்போது மருந்துகளின் விலை சற்றுக் குறைந்துள்ளது. [இ-51]

## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்: 07 — 06 — 1973

மறைவு: 06 — 01 — 1996

### சின்னத்தம்பி கருணாகரன்

[யாழ். தொழில் நுட்பக் கல்லூரி H.N.D.C. 1ஆம் வருடம், பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி G.A.Q]

**திதி: 25 - 12 - 1996**

நினைக்கும் நேரமெல்லாம் நெஞ்சம் துடிக்கின்றது
எமது அழுகுரல்கள் இன்னும் ஓயவில்லை
உனது இன்முகம் எம் நெஞ்சை விட்டு
மறையவில்லை
உனது கருணை உள்ளம் இன்றும் எம்மை
ஆகர்ச்சிக்கின்றது
நீ வாழ்ந்த காலத்தில் உதிர்ந்த வார்த்தைகள் கூட
இன்னமும் எம்மைச் சுற்றிக் காற்றில் மிதந்தபடி
உள்ளன - கருணா!
எம் நெஞ்சு இருக்கும் வரை உன் நினைவுகள்
தொடரும்.

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர் -

''பொன் இல்லம்'',
ஆவரங்கால்,
புத்தூர்.

[9089]

## தரம் குறைந்த நாட்டரிசி

குருநகர், டிச. 25

வர்த்தகத் திணைக்களம் மூலம் விற்பனை செய்யப்பட்டுவரும் நாட்டரிசி தரம் குறைந்துள்ளதாக முறைப்பாடு செய்யப்படுகிறது. (இ-51)

## ஆஸ்பத்திரியில் புகைத்தல் தடை

கொழும்பு, டிச. 25

இலங்கையில் உள்ள எல்லா அரசாங்க வைத்தியசாலைகளிலும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் புகைபிடிப்பது தடை செய்யப்பட இருப்பதாக சுகாதார, சமூக சேவைகள், நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்ற நோயாளிகள், வைத்தியசாலைக்கு வருகைதரும் மக்கள், வைத்தியசாலை அதிகாரிகள் உட்பட ஊழியர்கள் அனைவரும் வைத்தியசாலைகளில் புகைபிடிப்பது தடை செய்யப்படும்.

இது தொடர்பான சுற்று [illegible] அரசாங்க வைத்தியசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 03 — 06 — 1914

உதிர்வு: 25 — 11 — 1996

### திருமதி கந்தையா தங்கம்மா

(குப்பிளான்)

25—11—1996 அன்று இயற்கை எய்திய எமது தாயாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று எமது இல்லத்தில் (25 — 12 — 1996) நடைபெறும்.

இந் நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து மதிய போசனத்தில் பங்குபற்றுமாறும் அன்புடன் அழைக்கிறோம்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

4 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

(44305)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர்

# பணய கைதிகளை மீட்க முயன்றால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்

## பெரு நாட்டு போராளிகள் அரசுக்கு எச்சரிக்கை

லீமா, டிச. 25

லீமா நகரில் உள்ள ஜப்பானித் தூதரகத்தில் தர்க்குதல் மூலம் பணயக் கைதிகளை விடுவிக்க பெருநாட்டு அரசு முயன்றால் அதன் விளைவுகள் மிகவும் பாரதூரமானதாக இருக்கும்.

இப்படி போராளிகள் எச்சரித்துள்ளனர்.

இப்போது பணயக் கைதிகளாக உள்ளவர்கள் பெரு நாட்டு அப்பாவி மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாத நடவடிக்கைகளில் பங்குபற்றியவர்கள். எனவே அவர்களின் உயிர் பற்றி எங்களுக்கு அக்கறையில்லை. அரசு அதிரடி நடவடிக்கை எடுத்தால் அதனால் வரும் விளைவுகளுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் எனவும் போராளிகள் தெரிவித்தனர்.

பணயக் கைதிகளின் பிரச்சினையை அதிரடி நடவடிக்கை மூலம் முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்காவும் பிரிட்டனும் விசேஷ அதிரடிப் படையினரை அனுப்ப முன்வந்துள்ளன.

ஆனால் பெரு அரசு அதிகார பூர்வமாக அத்த உதவிகளை இதுவரை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஏற்கனவே பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் பயிற்சி பெற்ற 60 அமெரிக்க வீரர்கள் லீமா நகரில் நடவடிக்கைக்கு ஆயத்தமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானியத் தூதரகத்தில் சுமார் 20 போராளிகள் இருப்பதாகவும் —

ஒவ்வொருவரும் சுமார் 15 கிலோ வெடி மருந்துகளை தங்கள் உடலில் கட்டியிருப்பதாகவும் —

போராளிகளில் இருவர் 15 அல்லது 16 வயதுடைய இளம் பெண்கள் எனவும் — விடுவிக்கப்பட்ட பணயக் கைதிகள் தெரிவித்தனர்.

தாங்கள் மிகவும் மனிதாபிமானமாக போராளிகளால் நடத்தப்பட்டதாகவும் அவர்கள் கூறினர்.

மின்சாரம், நீர்விநியோகம் ஆகியனவற்றைத் துண்டித்து அரசாங்கம் தான் வீணான சிரமங்களை ஏற்படுத்தியது எனவும் அவர்கள் தெரிவித்தனர். (இ-10)

# பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் காலிதா ஷியா மீது ஊழல் வழக்கு

டாக்கா, டிச. 25

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் பேகம் காலிதா ஷியா, அவரது உள்துறை அமைச்சர் அப்துல் மேற்றின் செளந்திரி ஆகியோருக்கு எதிராக பங்களாதேஷ் ஊழல் ஒழிப்புத் துறை வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பேகம் காலிதா ஷியா தோல்வியடைந்த பின்னர் அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் வழக்கு இதுவாகும்.

பொலீஸ் இன்ஸ்பெக்டர்களாக தெரிவு செய்யப்பட்ட 287 பேரின் பட்டியலை ரத்துச் செய்துவிட்டு தாம் விரும்பியவர்களுக்கு அப்பதவிகளை வழங்கியதாக அவர் மீது இந்த வழக்கில் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. (இ-10)


யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

ஆண்டு 6 அனுமதிக்கான பரீட்சை

காலம்: 27-12-96 வெள்ளிக்கிழமை

நேரம்: காலை 9 மணி

பாடம்: தமிழ், கணிதம்

இடம்: யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

பரீட்சைக்குத் தோற்றாதோர் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அதிபர்

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

(44302)



அன்பின் அரசரே!
அமைதியின் அண்ணலே!

அன்பின் அரசரே! அமைதியின் அண்ணலே!
இன்பமே எம்மில் இலங்கிட வாரும்.
உலகிற்கு ஒளியான உன்னத மீட்பரே!
சகலர்க்கும் சஞ்சீவி ஒளடதம் நீரே!
மனித மாண்பும் மானிடப் பண்பும்
புனித சந்ததி புரிந்திட வையும்.
எமக்குள் மரித்துப் பிறர்க்கு ஈந்து
சுரக்கும் இதயம் ஒன்றையே தாரும்.
வேதனை சோதனை நோய்பிணி நீக்கித்
தேவைகள் தருவீர் திவ்விய பாலனே!
பணிந்து பழகவும் பகிர்ந்து வாழவும்
கனிந்த உள்ளம் எமக்கருள வாரும்.
உறவும் உணவும் உடைகளு மின்றி
கதறும் உயிர்கள் களிகூரச் செய்யும்.
ஒடுங்கிய வாழ்வும் அடங்கிய சிறையும்
முடங்கிய பாதையும் திறந்துநீர் ஆளும்.
இடுக்கண் நிரம்பிய இல்லங்கள் எல்லாம்
வடுக்கள் அகற்ற வல்லமை சொரியும்.
அகதி உலகமாய் அவலம் பெருகாது
அமைதி ஏற்பட அருள்புரி ஆண்டவா!
தெய்வீக உறவே! தேவனின் மகனே!
உய்யும் வழிகளில் உம்மொளி வீசும்.
தன்னலம் வெறுத்துப் பிறர்நலம் பேணும்
நல்மனச் சுபாவம் நீர்தர வேண்டும்.
வரலாறு படைத்து எங்களை இரட்சித்த
இறவாத புகழே! எம்மினத்தை மீளும்.
வானத் தொளிரும் வல்லமைச் சுடரே!
ஞானத் தெளிவை நல்லரசில் கூறும்.
மகிமையும் உமக்கே! மாட்சியும் உமக்கே!
மகிழ்வும் உமக்கே! மாண்பும் உமக்கே!
உருளும் உலகில் உயிர்களை இயக்க
அருளாய் இறங்கிய ஆண்டவா போற்றி.

ஞா. அரியமலர்,
மிருசுவில்.

(44180)


# சிங்கப்பூரில் ஆளும் கட்சி வெற்றி

சிங்கப்பூர், டிச. 25

சிங்கப்பூர் பொதுத் தேர்தலில் ஒருவாக்குத்தானும் போடப்படாத நிலையில் சிங்கப்பூர் ஆளும் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

சிங்கப்பூரில் பொதுத் தேர்தல் ஜனவரி 2 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றத்துக்கான 83 ஸ்தானங்களில் 47 ஸ்தானங்களை ஆளும் கட்சி போட்டியின்றிக்கைப்பற்றியுள்ளது.

எஞ்சிய 36 ஸ்தானங்களுக்கே ஜனவரி 2 ஆம் திகதி தேர்தல் நடைபெறுகிறது.

சிங்கப்பூரின் ஆளும் கட்சியான ''பீப்பிள்ஸ் அக்ஷன்'' கட்சி1959 ஆம்ஆண்டிலிருந்து தொடர்ந்துஆட்சியில்இருந்து வருகிறது. (இ-10)

# சீனாவில் சுவர் வீழ்ந்து 29 பேர் பலி

பீஜின், டிச, 25

தெற்கு சீனாவில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த ஒரு பாலம் இடிந்து வீழ்ந்ததில் 29 பேர் மரணமானார்கள்; 60 பேர் காயமடைந்தனர்.

பாலம் இடிந்து வீழ்ந்ததில் 90 பேர் அதற்குள் சிக்கியதாகவும் —

மீட்புப் பணியின்போது 29 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டதாகவும்—

ஏனையோர் காயங்களுடன் மீட்கப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

# வருந்தவில்லை என்கிறார் லிஹாரி

இஸ்லாமாபாத், டிச. 25

பெனாஸிர் பூட்டோ பற்றி தாம் வெளியிட்ட கருத்துக்கள் குறித்து தாம் வருந்தவில்லை என பாகிஸ்தான் ஜனாதிபதி பாரூக் லிஹாரி தெரிவித்துள்ளார்.

பெனாஸிர் பூட்டோ தனது சொந்த அரசியல் நலன்களுக்காகப் பொய் பேசினார் எனவும்—

அரசாங்கத்தின் வெவ்வேறு அங்கங்களுக்கு இடையிலான உறவுகளை அவர் புரிந்து கொள்ளவில்லை எனவும் பேட்டி ஒன்றில் அதிபர் லிஹாரி தெரிவித்திருந்தார். (இ-10)

# சாராயம் குடித்த யானை 13 பேரைக் கொன்றது!

பீஹார், டிச. 25

பீஹார் மாநிலத்தில் கடந்த வாரம் 8 பேரைக் கொன்ற மதம்பிடித்த யானை கடந்த ஞாயிறு இரவு மேலும் 5 பேரைக் கொன்றது.

கள்ளச்சாராயம் காய்ச்சிக் கொண்டிருந்தவர்களை முதலில் தாக்கி விரட்டியடித்த அந்த யானை பின்னர் காய்ச்சப்பட்ட சாராயம் முழுவதையும் குடித்துவிட்டு இந்த மனிதப்படுகொலைகளைச் செய்ததாக ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவித்தது. (இ-10)

# உடைகளைக் களைந்துவிட்டு தப்பிய பாதுகாப்பு அதிகாரி

ஜப்பானியத் தூதரகத்தை இடதுசாரிப் போராளிகள் கைப்பற்றிய போது, பாதுகாப்புப் பணிகளை மேற்பார்வை செய்துகொண்டிருந்த றொனால்டோ சொசேரி என்பவர் தனது ஆடைகளைக் களைந்து எறிந்துவிட்டு வெறும் உள் அங்கியுடன் ஓடித்தப்பி வெளியேறினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக்காட்சியை தொலைக்காட்சிகளும் படம்பிடித்துவிட்டன.

இராணுவ உடையில் தப்பி ஓடினால் போராளிகா தன்னைச் சுட்டுவிடுவார்கள் என்பதால் மிகவும் விவேகமாக அவர் இப்படிச் செய்தார்.

எனினும் பொறுப்பு இன்றி நடந்து கொண்டதற்காக பெரு நாட்டு அரசு அவரைக் கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளது. [இ-10]

# நத்தார் தாத்தா...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தார். துன்பப்படுவோர்க்கு துயர் நீக்கி புதிய வாழ்வளிக்கவும், ஒடுக்கப்பட்டோருக்கு விடுதலையை அளிக்கவும், உரிமை மறுக்கப்பட்டவர்களுக்கு உரிமையை பெற்றுக் கொடுக்கவும் அவர் பிறந்தார் அவரின் பிறப்பு நம் அனைவருக்குமான புதியதொரு பிறப்பாக அமைகின்றது.

நத்தார் என்றவுடனேயே எம்மையறியாமலே புத்துணர்வு எம்மில் பிறப்பதை நாம் உணர்கின்றோம். தமக்குவந்துள்ள துன்பங்கள், துயரங்கள் நீங்க வேண்டி, தமது எதிர்பார்ப்புக்கள், இலட்சியங்கள் இறைமகனின் பிறப்பிலாவது நிறைவேறாதா என்று எதிர்பார்த்து, பிறக்கும் பாலக இயேசுவிடம் வரம் கேட்க, நள்ளிரவு திருப்பலிக்குக் கூட மக்கள் விழித்திருந்து சாரி சாரியாக செல்லும் காட்சி பார்ப்போரை பரவசப்படுத்தும். துரதிஷ்ட வசமாக இம்முறை இக் காட்சியை யாழ். குடாநாட்டில் காணமுடியாதுள்ளது.

தமது உற்றார், உறவினர், நண்பர்களுக்கு கை கொடுத்து, வாழ்த்துக்களைக் கூறி தமது அன்பினை, நட்பினை,நன்றியுடன்தெரிவித்து அவர்களது இல்லங்களுக்குச் சென்று அவர்களது உபசரிப்பில் பங்குபற்றி மகிழும் நிகழ்வுகள் இன்றைய நாளில் உலகெங்கிலும் நடைபெறும். பல காலங்களாக கோபம் கொண்டிருந்தவர்கள் கூட, வீதிகளில் கண்டு விட்டால் அதை மறந்து கைகுலுக்கி மகிழ்வதில் இருந்து கிறிஸ்து பிறப்பின் முக்கியத்துவம் உணரப்படுகிறது. நீண்ட காலமாக தொடர்பற்று இருந்த உறவுகள் வாழ்த்துமடல் மூலம் புதுப்பிக்கப்படுவதும் இக்காலத்தில் நடக்கிறது.

கிறிஸ்மஸ் விழாவின் மகிழ்வில் 'நத்தார் தாத்தா' முக்கிய இடம்பெறுகிறார். நத்தார் காலங்களில் நடைபெறும் 'ஒளி விழா' நிகழ்வுகளிலும், இரவிரவாக, ஆடல், பாடல்களோடுவரும் கரோல் குழுக்களுடனும் எம் இல்லங்களை நாடி வந்து வாழ்த்துச் சொல்லி மகிழ்வித்துச் செல்லும் இந்தத் தாத்தாவை தெரியாதவர்கள், காணாதவர்கள் இல்லை எனலாம். இம்முறை யாழ். குடாநாட்டில் இரவு முழுவதும் ஊரடங்கு அமுலில் உள்ளதால் இரவுகளில் எம்மை மகிழ்விக்க அவர் வரவில்லை. எனினும் குருநகர் உட்பட சில பகுதிகளில் மாலை வேளைகளில் அவர் வலம் வரும் காட்சி வித்தியாசமாக உள்ளது.

சிவப்பு நிற அங்கியையும், நீண்ட வெண்ணிறத் தாடியையும் கொண்ட இந்த நத்தார் தாத்தா எப்படித் தோன்றினார். அதன் கதை இதுதான்:

கி.பி. நான்காம் நூற்றாண்டில் மத்திய ஆசியாவில் 'மீரா' என்னும் நகரத்திற்கு ஆயராக இருந்தவர் 'நிக்குளொஸ்' என்பவர். இளம் வயதிலேயே இவர் ஆயராக தெரிவாகியிருந்தார். இவர் குழந்தைகள் மட்டில் அளவற்ற அன்பும் இரக்கமும் கொண்டிருந்தார். இக் காரணங்களால் இவரை 'குழந்தைகளின் ஆயர்' என்றும் அழைத்தார்கள். ஒவ்வொரு ஆண்டிலும் நத்தார் பண்டிகைக் காலங்களில் இவர் எல்லாக் குழந்தைகளையும் அழைத்து அவர்களுக்கு பரிசில்கள், வெகுமதிகள் கொடுத்து அவர்களை மகிழ்வித்து வந்தார்.

பிற்காலத்தில், இவர் இறந்தபோதிலும், இவர் செய்து வந்த இப்பணியை இறக்கவிடாமல் தொடர்ந்தார்கள். இவரது பெயரில் பல தேவாலயங்கள் கட்டப்பட்டன. டச்சு மாலுமிகள் இவரது இச்செயல்களை தாங்கள் செல்லும் நாடுகளில் எல்லாம் பரப்பினார்கள். இதுவே காலப்போக்கில், எல்லா நாடுகளிலும் பரவி 'நத்தார் தாத்தா' தோற்றக் காரணமானது. கிறிஸ்மஸ் தாத்தாவை ஆங்கிலத்தில் 'சாந்தாகுளோஸ்' என்று அழைக்கிறார்கள். 'நிக்குளொஸ்' என்ற ஆயரின் பெயரே மருவி இவ்வாறு வந்துள்ளது.

இன்று 'நத்தார் தாத்தா, பல்வேறு நாடுகளில் பல்வேறு ரகங்களில் வலம் வருகிறார். ஆனால் இன்றுள்ளதைப் போல் நத்தார் தாத்தாவின் தோற்றம் ஆரம்பத்தில் இருக்கவில்லையென்றும் இன்றுள்ள தோற்றத்தை 1822இல் அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் கிளெமென்ட்ஸ் மூர் என்பவரே உருவாக்கினார் என்றும் கூறுகிறார்கள்.

நத்தார் தாத்தா வந்துவிட்டால் போதும், குழந்தைகளின் உள்ளங்கள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கும். காரணம் அவர் கொண்டு வரும் பொதிக்குள் விளையாட்டுப் பொருள்கள், இனிப்பு வகைகளை கொண்டு வந்து அவர்களுக்கு வழங்குவதுதான்.

★

கி. செல்மர் எமில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள Shiram Honda ஜெனரேற்றர் மொடல் நம்பர் E.M. 650 (தனிப்பாவனை) விற்பனைக்கு உண்டு. க. கனகரெத்தினம், மரக்கறிச் சந்தை, பருத்தித்துறை.
(சி/3784)

**வயல் விற்பனைக்கு**

மறவன்புலவில் நல்ல விளைச்சல் தரும் நெற்காணி 75 பரப்பு உடன் விற்பனைக்கு. தொடர்பு: V. முத்து, மே. பா. திருமதி ஐ. புவனேஸ்வரி அண்ணாமலை வீதி, சுதுமலை.
(44292)

## படையினரால் வெங்காயம் கொள்வனவு

வலி.தென்மேற்கு, டிச. 25
சுன்னாகத்தில் விவசாயிகளிடமிருந்து வெங்காயத்தை கிலோ ரூ. 15 வீதம் இராணுவத்தினர் கொள்வனவு செய்கின்றனர்.

சுன்னாகம் இராணுவ அதிகாரியிடம் பதிவு செய்த விவசாயிகளிடம் வெங்காயம் முன்னுரிமை அடிப்படையில் கொள்வனவு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெங்காயக் கொள்வனவு விடயத்தில் சிவில் தரப்பினரை நம்பி ஏமாந்த விவசாயிகளுக்கு இது சற்று ஆறுதல் தரும் நடவடிக்கை எனத் தெரிவிக்கப்பட்டது.
(இ-145)

## யுனிசெவ் உதவி

வலிகாமம் தெற்கு,டிச.25
இணுவில் கந்தசாமி கோயில் இளம் தொண்டர் சபையினரால் நடத்தப்படும் சிறுவர் பாடசாலை, சங்குவேலி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் சிறுவர் பாடசாலை ஆகியவற்றுக்கு கட்டட திருத்த வேலைகளுக்காக 'யுனிசெவ்' நிறுவனத்தினரால் தலா ஐயாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு இடங்களிலும் உள்ள கட்டடங்களை திருத்தும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
(இ-152)

## சந்திரிகா இந்தியா பயணம்

கொழும்பு, டிச. 25
ஜனாதிபதி சந்திரிகா நத்தார் விடுமுறையைக் களிப்பதற்காக தனது குடும்பத்தினருடன் இந்தியா சென்றுள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அவரது பயணத் திட்டங்கள் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்ததாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (இ-10)


## பிரத்தியேக வகுப்புக்கள்

புலமைப் பரிசில்
ஆண்டு **6 - 11**
வரையிலான வகுப்புக்கள்
ஆரம்பம்: **30-12-96**
மாணவர்கள் **27-12-96**
மாலை **3 . 00** மணிக்கு
தொடர்பு கொள்ளவும்.

**கீதா - தயா**
55, அரசடி வீதி
(கஸ்தூரியார் வீதிச் சந்தி
யாழ்ப்பாணம்) (9114)



மாணவ மாணவிகள் அனைவருக்கும் எமது
நத்தார்-புதுவருட நல் வாழ்த்துக்கள்

# J-T-C
## TUITION CENTRE

பாங்ஷால் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

**1997 ஆம் ஆண்டிற்கான**
ஆண்டு **05 - O/L** வரையிலான வகுப்புக்கள் யாவும்
தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களால் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

## A/L 97, 98
### கலை, வர்த்தக வகுப்புக்கள்


| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. விக்கி |
| கணக்கியல் | — | திரு. கியூமன் |
| வர்த்தகம் | — | திரு. கெனத் |
| வணிகப் புள்ளிவிபரவியல் | — | பிரபல ஆசிரியர் |
| தமிழ் | — | திரு. விக்ரர் |
| கிறிஸ்தவம் | — | செல்வி அனற் |
| நாடகமும் அரங்கியலும் | — | திரு. யோன்சன் |
| அளவையியல் | — | திரு. யூலிதயான் |
| புவியியல் | — | செல்வி நிர்மலா |

**SPOKEN ENGLISH - BATCH III**

**ஆரம்பம்: 05-01-1997**

அனுமதிகளைப் பதிவு செய்யலாம்.
(44291


# 7 ஆம் ஆண்டு அழியா நினைவலைகள்



அமரர்
## சின்னையா கனகரத்தினம்
**(மகாலிங்கம்)**
(ஹப்பி ரெக்ஸ் பங்காளர்)

**மண்ணகம்:** **05—07—1952**
**விண்ணகம்:** **11—01—1990**
**திதி: 25-12-1996**

ஏழாண்டு சென்றதையா ஆறிடுமோ எங்கள்மனம்
அவனியிலே உன்பிரிவால் வாடுகிறோம் என்றென்றும்
பூவாக மலர்ந்தாய் பாதியிலே நீ உதிர்ந்தாய்
மன்னவனே மகாலிங்கம் மறந்திடுமா எம்நெஞ்சம்
நீறாகிப் போனதடா உன்னுடலும் அன்று
ஆறாகிப் பாயுதடா கண்ணீரே இன்றும்
ஏழாண்டு ஆனாலும் அன்பனே உன்னை
அவனியிலே என்றும் மறவோமே யாமே!

சாந்தி! சாந்தி! சாந்தி!

**மனைவி, பிள்ளைகள்,**
**சகோதரர்கள், மருமக்கள்.**

398/2, நொத்தாரிஸ் ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம். (44306)

# நீங்கா நினைவில் முதலாம் மாதம்

அமரர்
## குலத்துங்கம் அரசகுலசிங்கம்

அமரர் பொன்னையா குலத்துங்கம் (முன்னாள் விதானையார், மானிப்பாய்), சிவக்கொழுந்து தம்பதியரின் இரண்டாவது புதல்வரும், ஓய்வு பெற்ற காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகத்தருமான அமரர் குலத்துங்கம் அரசகுலசிங்கம் (அரசர்) அவர்கள் சிவபதமடைந்தது குறித்து அன்னாரை நினைவு கூருகின்றோம்.

அன்புத் தெய்வமே! எமக்காக வாழ்ந்து, எம்மை வழி நடத்திய பெருந்தகையே! உங்களது ஆத்மா சாந்தி பெற கல்வளை விநாயகரை மனமார வேண்டுகிறோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,**
**உற்றார், உறவினர்.**

மானிப்பாய். (44303)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின்: மடியில்
**20 — 12 — 1968**



ஆண்டவன்: அடியில்
**25 — 11 — 1996**


## செல்வன் ஆறுமுகம் சந்திரகுமார்
(யாழ். பல்கலைக்கழக 3ஆம் வருட விஞ்ஞானபீட மாணவன்)

'பல்கலையில் பயில வந்த வல்லவனே
பல்கலையும் பயின்று வந்த நல்லவனே
பண்புடன் நீ பாடங்களைப் பயின்று வந்தாய்
அன்புடன் நீ எமையெல்லாம் அரவணைத்தாய்
தேன் சொட்டும் மொழியால் எமைச் சிரிக்க
வைப்பாய்
எமைவிட்டு நீயின்று பிரிந்திட்டாலும்
உன் நினைவு எமை விட்டுப் பறந்திடாது?'

**3 ஆம் வருட விஞ்ஞானபீட மாணவர்கள்**
**யாழ். பல்கலைக்கழகம்.**
(44304)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
**11 — 06 — 1926**



இறப்பு:
**25 — 12 — 1995**

அமரர்
## டானியல் அந்தோனிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர்)
திதி: **25—12—1996**

ஒளி வழங்கி எரிகின்ற மெழுகுவர்த்தியாக வாழ்ந்து, எம்மை எல்லாம் வளமுடன் வாழ வழி கோலிய எங்கள் இதய தெய்வமே, கிறிஸ்து பிறந்த நன்னாளில் தேவன் உம்மை விண்ணுலகம் அழைத்து மகிழ்ந்தாரோ!

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்டு ஆண்டொன்று மறைந்தாலும் உங்கள் பாச நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றும் நீங்காது நிலைத்து நிற்கும்.

உங்களின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்:
**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

''றோஸ் மஹால்''
24, 1-ம் குறுக்கு வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம். (9113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உறைக்காத தானங்கள்

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் போரினால் நாட்டின் பொருளாதாரம் மிகப் பெருமளவில் பாதிக்கப்படுகிறது என்பது இப்போது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று.

இலங்கையின் பொருளாதாரத்தைக் கண்காணித்து வரும் மத்திய வங்கியின் உயர் அதிகாரிகள் தெரிவிக்கும் தகவல்களும், வெளியிடும் புள்ளி விவரங்களும் நாட்டின் பொருளாதாரத்தைப் போர் வேரறுத்து வருகிறது என்ற பயங்கரமான உண்மையையே உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காட்டுகின்றன.

நாட்டின் இப்போதைய பாதுகாப்புச் செலவினம் மொத்தத் தேசிய உற்பத்தியில் 4 தொடக்கம் 5 சதவீதத்தை விழுங்கி விடுவதாக மத்திய வங்கியின் ஆராய்ச்சித் துறைப் பணிப்பாளர் கலாநிதி ஏ. ஜி. கருணசேனா தெரிவித்திருக்கின்றார்.

பாதுகாப்புச் செலவினம் உயர்ந்து செல்லச் செல்ல, பணவீக்கமும் அதிகரிப்பதாக மத்திய வங்கியின் புள்ளி விவரவியல் பகுதியின் பணிப்பாளர் கலாநிதி எஸ். கொலம்பகே தெரிவித்திருக்கிறார்.

போருக்கென இவ்வருடத்துக்குரிய செலவுத் தொகையாக 3,700 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. அது போதாமல் போகவே மேலதிக நிதியைப் பெறுவதற்காக வங்கிகளிடம் கடன் பெறப்பட்டது. அதனால் பணவீக்கம் அதிகரித்தது— இந்தவிவரத்தையும் கொலம்பகே கூறியுள்ளார்.

போர்முடிவுக்குக் கொண்டு வரப்படுமானால், இலங்கை பொருளாதார முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்க முடியும் என்ற கருத்தை கலாநிதி கருணசேனா வெளியிட்டார்.

ஆனால் அரசியல்வாதிகளின் மனதில் இந்தப் புள்ளி விவரங்கள் உறைப்பதாக இல்லை. எவ்வளவுக்கு எவ்வளவு விரைவில் — உடனடியாக — போரை நிறுத்த முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்தலாம் என்ற மிகப் பெரிய உண்மையை, யதார்த்தத்தை அவர்கள் கண்டு கொள்வதாக இல்லை; கண்டும் காணாதவர்களாக இருக்கிறார்கள்— நடிக்கிறார்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு போர் நிறுத்தம் ஒரு நிபந்தனையாகக் கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கூறியிருப்பது மேற்கூறிய நடிப்புத் தனத்தையே காட்டுகிறது.

அரசாங்கத் தரப்பினரின் கருத்துக்களும் செயற்பாடுகளும் போரை விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சமிக்ஞை எதனையும் காட்டவில்லை.

நாட்டின் பொருளாதாரம் கீழ் நோக்கிச் சென்று கொண்டிருப்பதை அக்கறையுடன் பொருட்படுத்தினால், போரை நிறுத்த வேண்டும் என்ற உணர்வும், செயற்பாடும் நிச்சயம் தானாகவே உதிக்கும்.

ஆனால், தென்னிலங்கை அரசியல் தலைவர்களுக்கு அத்தகைய அக்கறை இருப்பதாகச் சொல்ல முடியவில்லை. அதனால் நாட்டைப் பொருளாதார ரீதியிலேனும் காக்க வேண்டும் என்ற உணர்வு அவர்களுக்கு உண்டாகும் என்று எதிர்பார்க்க முடியாது.

# யாழ். குடாநாட்டு பாடசாலைகளுக்கு 1கோடி 22 லட்சம் ரூபா பொருள்கள்

கொழும்பு, டிச. 25

யாழ். குடாநாட்டில் உள்ள பாடசாலைகளின் பாவனைக்கென ஒரு கோடி 22 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

உலக வங்கியின் உதவித் திட்டத்தின் கீழ் கல்வி, உயர் கல்வி அமைச்சு இந்த உதவியை வழங்கியுள்ளது.

பத்தரமுல்லையில் உள்ள இசுறுபாயாவில் அமைச்சர் றிச்சர்ட் பத்திரான இந்தப் பொருள்களை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோகான் தளுவத்தவிடம் உத்தியோக பூர்வமாக நேற்று முன்தினம் கையளித்தார்.

ஆரம்ப வகுப்புத் தேவைக்கென 130 கணித உபகரணங்களும், 144 இரசாயன விஞ்ஞான உபகரணங்களும், 200 இரும்பு அலுமாரிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இவை தவிர விளையாட்டு உபகரணங்கள், றோனியோ, தட்டச்சு இயந்திரங்கள், விஞ்ஞான மற்றும் சுகாதாரக் கல்விக்குத் தேவையான உபகரணங்கள் ஆகியவையும் இந்த அன்பளிப்பில் அடங்கும்.

யாழ்ப்பாணப்பிரதேசத்தில் 96 ஆயிரத்து 800 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 4 ஆயிரத்து 463 ஆசிரியர்கள் சேவை புரிகின்றனர்.

இங்குள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான துரித திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்பட விருப்பதாக அமைச்சர் மேலும் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள 3 தேசிய பாடசாலைக் கட்டடங்களைப் புனரமைக்க 76 இலட்சம் ரூபா வழங்கப்படும்.

மேலும் பாடசாலைகளின் புனர் நிர்மாண வேலைகளுக்கென 13 கோடி 31 இலட்சம் ரூபாவும், நீண்ட கால புனர் நிர்மாண வேலைகளுக்கென 19 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். (உ-3)

## புலிகள் மீது படையினர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிச. 25

நேற்று முன்தினம் பருத்தித்துறைப் பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றுக்குச் சென்ற புலிகள் அங்கிருந்த 65 வயதுப் பெண்மணி ஒருவரை வெளியே அழைத்துக் கொலை செய்ததாக யாழ் இராணுவ வட்டாரங்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

'இதற்கு முன்னரும் இத்தகைய கொலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பயங்கரவாதத்தைக் கண்டிப்பதால் பெரும்பாலானோர் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர். தமது அழிவு நோக்கங்களைப் பூர்த்தி செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் அவர்கள் அந்த மக்களைத் துரோகிகள் எனக் கொலை செய்கிறார்கள். 65 வயது பெண்மணியின் கொலை தொடர்பாக அப்பிரதேச மக்கள் மிகுந்த வெறுப்புக்கும் குரோதத்திற்கும் உள்ளாகியுள்ளனர். — இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பு மேலும் தெரிவித்தது. (உ)

## கெனமன் தொடர்ந்து மயக்கத்தில்

கம்யூனிஸ்ட்கட்சியின் மூத்த தலைவரான பீற்றர் கெனமன் தொடர்ந்து மயக்க நிலையில் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவருக்கு மூளைக்காய்ச்சல் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. (உ-3-150)

## வழிபடுவோர் சங்கக் கூட்டம்

நவாலி அட்டகிரி முருகன் ஆலய வழிபடுவோர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆலய வாயிலில் நடைபெறும். (அ-4-15)

## திருவாதிரை ஆருத்திரா விழாக்கள்

குடாநாட்டில் உள்ள ஆலயங்களில் இன்று திருவாதிரைத் திருவிழாவும் ஆருத்திரா தரிசனமும் சிறப்பாக நடைபெறவுள்ளன. திருவெம்பாவை இறுதி நாளான இன்று பல ஆலயங்களில் தேர்த் திருவிழாவும் இடம் பெறும்.

சிவன் ஆலயங்களில் அதிகாலை 2.00 மணிக்கு நடேசருக்கு கலச சங்காபிஷேகமும், விசேட அபிஷேகங்களும் நடத்தப்பெற்று, கூத்தப் பெருமானின் ஆருத்திரா தரிசனம் அதிகாலை 4.00 மணிக்கு இடம்பெறும்.

காலை திருவாதிரைத் திருவிழா விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

## நத்தார் நிகழ்வுகள்

நத்தார் தினத்தை முன்னிட்டு யாழ். மரியன்னை ஆலயத்தில் புதிய நேரப்படி இன்று காலை 6-30 மணிக்கு யாழ். ஆயரின் கூட்டுத் திருப்பலியும் காலை 8 மணிக்கு இரண்டாவது திருப்பலியும் மாலை 5 மணிக்கு மூன்றாவது திருப்பலியும் நடைபெறும். (அ)

★ ★ ★

யாழ்ப்பாணம் பகவான் சத்தியசாயி சேவா சமித்தியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நத்தார் தின விழா நடைபெறும்.

பஜனை மற்றும் ஆராதனைகள் இடம்பெறும்.

பலாலி ஆசிரிய கலாசாலை உப அதிபர் துரை. ஆரோக்கியதாசன் அருளுரை வழங்குவார்.

''காயத்திரியும் யேசுபிரானும்'' என்னும் பொருளில் சிறப்புரையும் நடைபெறும்.

# அடியார்க்கு அருள் பொழிந்திடும் ஆருத்திரா தரிசன நன்னாள் இன்று

அங்கு இங்கு என்று இல்லாமல், எங்கும் நிறைந்தவன் இறைவன். அவன் எல்லாம் அறிகின்றவன்; இன்பமயமானவன்; கருணை மழை பொழிகின்றவன்; எல்லா ஆற்றலும் உடையவன். அவன் தன் அருட் செயல்களை, ஆன்மாக்களின் பொருட்டு இயற்றுவதற்காகப் பல்வேறு திருமேனிகளை (அருவம், உருவம், அருவுருவம்) எடுத்துக் கொள்ளுகின்றான்.

இவைகளுள் இடையறாது ஆனந்தத் தாண்டவம் புரியும் நடராஜ மூர்த்தமும் ஒன்று. இது எல்லா மூர்த்தங்களிலும் சிறந்தது. முதலும் முடிவும் இல்லாத இந்தத் தாண்டவமே உலக இயக்கத்திற்குக் காரணமாகிறது.

சிவமும் சக்தியும் இணைந்து இயற்றும் தாண்டவம் ஆன்மாக்களுக்குத் தனு, கரண, புவன, போகம் என்பவற்றை அருளுகிறது [தனு:உடம்பு.கரணம்:இந்திரியமுதலாகியபுறக் கருவிகள், மனம் முதலாய உட்கருவிகள், புவனம்: வசிக்கும் உலகம், போகம்: அனுபவிக்கப்படும் பொருள்கள்] முடிவில் முத்தி இன்பத்தை வழங்குகிறது.

நடராஜ மூர்த்தியின் திருக்கரத்தில் விளங்கும் உடுக்கை படைத்தலையும்; அபயகரம் காத்தலையும்; அக்கினியை ஏந்திய திருக்கரம் அழித்தலையும்; ஊன்றிய திருவடி, மறைத்தலையும்; தூக்கிய திருவடி அருளலையும் குறிக்கின்றன. சூழ்ந்திருக்கும் திருவாசி 'ஓங்காரம்' ஆகும்.

நடன கரணங்கள் (நடன வேறுபாடு, எண்ணிக்கை) நூற்றெட்டு என்று பரத சாஸ்திர நூல்கள் விவரிக்கின்றன. சிவத் தாண்டவமும் நூற்று எட்டு என்று சிவாகமங்கள் பேசுகின்றன. பரதக் கலை நடராஜப் பெருமானிடமிருந்து தோன்றியது.

தாண்டவ வடிவம் [illegible] தேசம் முழுவதும் [illegible]படினும், பெருமையுடன் போற்றப்படுவது தமிழ் நாட்டில் தான். தமிழ் நாட்டில் உள்ள எல்லாக் கோயில்களிலும், நடராஜ உருவம் வழிபாட்டுக்கு உள்ளதாயினும் தில்லை என்று சிறப்பித்துக் கூறப்படும் சிதம்பரத்தில் உள்ள நடராஜ மூர்த்திக்குத் தனிச் சிறப்பும் வழிபாட்டு முறைகளும் உண்டு.



சிதம்பரம் பஞ்சபூதத் தலங்களில் ''ஆகாயத்தலம்'' ஆகவும் முத்தித் தலங்களில் ''தரிசிக்க முத்திதருகின்ற தலம்'' ஆகவும் துலங்குகின்றது.

'தாண்டவ வடிவு மூலம் பல தத்துவங்களைத் தெளிவுறக் காட்டும் நடராஜப் பெருமானைத் தரிசித்த அப்பர் அடிகள் —

'இந்தத் திருவுருவைத் தரிசிக்கும் பேறு கிடைக்குமாயின் மனிதப் பிறப்பை மீண்டும் வேண்டுவேன். அது மற்றொருமுறை வந்தாலும் குறைவு இல்லை', என்று உள்ளம் நெகிழ்ந்து ''குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்'' என்று பாடிப் பரவசமடைந்தார்.

மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற்காலம். ஆகையால் அந்த நாள்களில் செய்யப்படும் திருவிழா 'அனுக்கிரகம்' என்ற இனிய அருளல் தொழிலைக் குறிக்கும். மார்கழித் திருவாதிரை நட்சத்திர தினத்தைத் தீர்த்த நாளாகக் கொண்டு கொடியேற்றம் நிகழும்.

ஒவ்வொரு மாதமும் திருவாதிரை நட்சத்திரம் வருமாயினும் மார்கழியில் திருவாதிரையுடன் சந்திரன் பொருந்தி நிற்பதனால் அந்தத் தினம் புனிதமும் பொலிவும் பெறுகின்றது. சிவபிரானுக்கு 'ஆதிரையன்' என்ற திருநாமமும் உண்டு.

ஒன்பதாவது தின இரவு நடராஜப் பெருமானுக்கு ஆயிரங்கால் மண்டபத்தில் அபிஷேகம் நடைபெறும். பத்தாவது நாள் சூரிய உதயத்திற்கு முன், அலங்காரம் செய்யப்பட்ட அருள் பொலியும் திருவுருவை அடியார்கள் தரிசித்து மனிதப் பிறவி எடுத்ததன் பயனைப் பெற்று விட்டதாகப் பேரானந்தம் பெறுவர்.

இந்தக் கண்கொள்ளாக் காட்சியை ''ஆருத்திரா தரிசனம்'' (ஆதிரையானை ஆதிரை நட்சத்திரத்தில் காணுதல்) என்று போற்றிப் புகழப்பட்டு வந்துள்ளது.

ஈழ நாட்டில் உள்ள சிவாலயங்களிலும் திருவாதிரைத் திருவிழா பக்திப் பரவசத்துடன் அக்கறையாக இயற்றப்படுகிறது.

மாதங்களில் மார்கழி தான் சிறந்தது என்றும், அதில் வரும் திருவாதிரைத் தினம் மிகவும் மேலானது என்றும், அந்தத் தினத்தை இறுதியாகக் கொண்ட முதல் பத்து நாள்களும் மிகவும் சிறந்தவை என்றும் அக்காலத்தில் திருவெம்பாவைப் பாராயணமே உயர்ந்தது என்றும் அறிவு நிறைந்த நம் முன்னோர் கொண்டனர்.

- மூளாய் அருணாசலம்

## நாளை

**மார்கழி 11**

வியாழக்கிழமை

**திதி:** துதியை அதிகாலை 5. 31 வரை.

**நட்சத்திரம்:** புனர்பூசம் பின் இரவு 1.07 வரை.

**ராகுகாலம்:** 1.57-3.27

**சுபநேரம்:** 7.57 - 9.27

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## யாழ். ஆயர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாக என்று வானதூதர்கள் அறிவித்தனர். கிறிஸ்து பிறப்பின் இரண்டாயிரம் வருடங்களின் நிறைவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நாம், எமது உள்ளங்களில் இருக்கும் பகைமை, கோபம், பழிவாங்கும் மனப்பான்மை போன்றவற்றைக் களைந்து யாவரையும் மன்னித்து ஏற்றுக்கொள்ளும் நற்பண்பைக் கைக்கொள்ளுமாறு பாலன் இயேசு நம்மிடம் கேட்கின்றார்.

கடந்தகால இடம் பெயர்வின் பின்னர் மீண்டும் நத்தார் நிகழ்வினை யாழ். மண்ணில் நிறைவேற்ற வாய்ப்பளித்த இறைவனுக்கு நன்றி சொல்லுகிறோம்.

யாழ். குடாநாட்டிலும் வன்னிப் பிரதேசத்திலும் வாழும் மக்கள் அனைவருக்கும் குழந்தை இயேசுவின் இனிய நத்தார் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (அ)

## யாழ். எம்.பி. ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டனும் வாழவேண்டும் என்பதே இறைமகனின் இலட்சியமாக இருந்தது.

துன்பமும், அவலமும் மலிந்த வாழ்வு நீங்கி ஒளிமயமான எதிர்காலத்தைத் தரக் கூடிய சமாதானம் பிறப்பதற்கான ஒளிக் கீற்றுகள் பரந்து படர்ந்து சமாதானம் நிறைந்த ஒளியைத் தரட்டும்.

எல்லோருக்கும் எமது நத்தார் நல்வாழ்த்துக்கள்!

## யாழ். தளபதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வனே நிறைவேற்ற நீங்கள் அளித்த ஒத்துழைப்புக்கு எனது நன்றிகள். எதிர்காலத்திலும் இவ்வாறான ஒத்துழைப்பை இராணுவத்திற்கு வழங்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். உங்களது சுபீட்சமான எதிர்காலத்திற்காக நான் பிரார்த்தனை செய்கின்றேன்.'' (உ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இரட்சிப்பின் சத்தம் சபை

# நத்தார் புது வருட வாழ்த்துக்கள்

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார் -- (ஏசாயா 9-06)

சகல ஆவிக்குரிய சபைகளுக்கும் சகல ஆவிக்குரிய போதகர், ஊழியர்கள், விசுவாசிகள் யாவருக்கும் எமது உள்ளம் நிறைந்த நத்தார், புது வருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

போதகர், ஊழியர்கள்,
விசுவாசிகள்.

இரட்சிப்பின் சத்தம் சபை,
கண்டி றோட்,
சாவகச்சேரி.
(44317)



## கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்!

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்
நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்
அவர் நாமம் அதிசயமானவர்
ஆலோசனைக் கர்த்தர் வல்லமையுள்ள
தேவன் நித்திய பிதா சமாதானப்
பிரபு எனப்படும். — ஏசாயா 9. 6

அனைவருக்கும் எமது
கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்!

# மேசியா நகைமாடம்

111 C கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
( 44020 )


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

உதிர்வு:
08
12
1994



திதி:
24
12
1996

### வல்லிபுரம் கந்தையா

ஈராண்டு போனதுவே, உங்கள் முகம்
பாராமல் எம் கவலை ஓயவில்லை.
நித்தம் தங்கள் நினைவுகளே - எம்
மனதில், ஆறுதல் தேடி.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.
(சி/3793)

## யாழ். செயலக
## புனர்வாழ்வுப் பகுதிப் பொருட்களை ஏற்றிச் (காவிச்) செல்வதற்கான

# கேள்வி கோரல்-1997

பின்வரும் இடங்களுக்கு அத்தியாவசிய சேவை ஆணையாளரினால்/ உணவு ஆணையாளரினால்/ கூட்டுத்தாபனங்களினால்/அரச சார்பற்ற நிறுவனங்களினால் / தனியாரினால் யாழ். மாவட்டத்திற்கு அனுப்பப்படும் பொருள்களை எடுத்துச்செல்வதற்கான கேள்வி கோரப்படுகின்றது. இக்கேள்வி விண்ணப்பப் பத்திரத்தினை சாதாரண வேலை நாட்களில் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 100/-ஐச் செலுத்தி 27-12-1996 க்கு முன்பு பெற்று, 31-12-1996 க்கு முன்பு மேற்படி அலுவலகததில் உள்ள கேள்விப் பெட்டியில் இடவேண்டும்.

| இருந்து | வரை | (ஒருவழிப்பாதை) கி.மீற்றர் |
|---|---|---|
| 01. காங்கேசன்துறை துறைமுகம் | - காங்கேசன்துறை களஞ்சியம் | - 1.5கி.மீ. |
| 02 காங்கேசன் துறை களஞ்சியம் | - யாழ்ப்பாணம் | - 22 கி,மீ. |
| 03. பருத்தித்துறை துறைமுகம் | - மந்திகை களஞ்சியம் | - 3.5 கி.மீ. |
| 04. பருத்தித்துறை துறைமுகம் | - யாழ்ப்பாணம் | - 35 கி.மீ. |

செ. பத்மநாதன்
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.
(சி/3792)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேட்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

## இந்திய விமானம் நொறுங்கியது

சென்னை தாம்பரம் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு ஹைதராபாத்துக்குச் சென்று கொண்டிருந்த இந்திய விமானப்படை விமானம் ஒன்று நேற்றுப் பிற்பகல் ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டப் பகுதியில் வீழ்ந்து நொறுங்கியதில் விமான ஊழியர்கள் உட்பட 22 பேர் உயிரிழந்தனர்.

விமானப் படையின் 'பாண்ட்' குழுவை ஏற்றிச் சென்ற 'அவ்ரோ' விமானமே வீழ்ந்து நொறுங்கியது. அது வீழ்ந்த இடத்தில் முப்பது அடி ஆழமான குழி ஏற்பட்டது. (உ-3)

## இனப்பிரச்சினை ...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

செய்தி வெளியிட்டுள்ளன.

அரசு விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க இந்தியாவின் மத்தியஸ்தத்தை சந்திரிகா கேட்கக்கூடும் என்றும்—

அவர் உத்தியோகப்பற்றில்லாத முறையில் இந்தியப் பிரதமர் தேவகௌடாவுடன் பேசுவார் என்றும் — இந்தியப் பத்திரிகைகள் ஊகங்கள் தெரிவித்துள்ளன.

போர் நிலைமை, அகதிகள் விவகாரம் என்பன குறித்தும் ஜனாதிபதி இந்தியத் தலைவர்களுடன் முக்கிய பேச்சுக்களை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தாம் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று தமது இரகசியத் தொடர்புகளூடாக அதற்கான சமிக்ஞைகளை இந்தியத் தலைவர்களுக்குக் காட்டியதைத் தொடர்ந்தே —

சந்திரிகா தனிப்பட்ட விஜயம் என்ற பேரில் இந்தியா சென்றிருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

(முதலில் வெளியான செய்தி 2 ஆம் பக்கத்தில்)

## வழக்குப் ...

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்த போது இந்த வழக்குத் தாக்கல் குறித்து அவரிடம் தாம் நேரில் தெரிவித்திருந்ததாகவும் டக்ளஸ் கூறினார்.

துணிவு இல்லாத காரணத்தால் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்க முடியாத நிலையில் உள்ளதால், வழக்குத் தாக்கல் செய்வது என்ற முடிவுக்கு டக்ளஸ் தேவானந்தா தள்ளப்பட்டுள்ளார் என்றும் —

புதுடில்லியில் இருந்த சமயம் டக்ளஸ் தேவானந்தா இது குறித்து சட்ட ஆலோசனை பெற்றுள்ளார் என்றும்—

''த ஐலண்ட்'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

## 37,000 அரச...

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விழுந்தடித்துக் கொண்டு ஓய்வு பெறுவதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்திருக்கின்றார்கள்.

அரச சேவையில் தற்போது சுமார் ஏழரை லட்சம் பேர் உள்ளனர். அவர்களில் ஐந்து வீதமானோர் தற்போது ஒரேயடியாக ஓய்வு பெறப் போகின்றார்கள்.

அரசாங்க ஊழியரின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டும் என்ற உலக வங்கி நிபந்தனையைப் பூர்த்தி செய்யும் நோக்குடனேயே, மேற்படி சுற்றறிக்கையை காலக்கெடு வைத்து வாபஸ் பெறுவதன் மூலம் அரச ஊழியர்களை ஒரேயடியாக விலக்க அரசு முயல்வதாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது.

மேற்படி சுற்றறிக்கையை வாபஸ் பெறும் நடவடிக்கையைக் கைவிடுமாறு பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.கவும் அரச ஊழியர் தொழிற்சங்கங்களும் கோரியிருக்கின்றன. (உ-10-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தனங்கிளப்புச் சம்பவம்:

# உதயன் செய்திக்கு இராணுவம் மறுப்பு

யாழ்ப்பாணம்,டிச. 25

சாவகச்சேரி, தனங்கிளப்பு வீதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்த இளைஞர் படையினரின் பதில் தாக்குதல்களின் போது கொல்லப்பட்டவராவார்.

—இவ்வாறு யாழ். இராணுவ வட்டாரங்கள் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

நேற்று முன்தினம் உதயனில் ''தனங்கிளப்புப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு சில இளைஞர்கள் பலியாகியுள்ளனர்''—என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள மறுப்பு அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

சாவகச்சேரி, தனங்கிளப்பு, மறவன்புலோ போன்ற பிரதேச வயல்களில் சில இளைஞர்களின் சடலங்கள் 22 ஆம் திகதி காணப்பட்டதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன என்று வெளியான செய்தி பொய்யானது என்று பாதுகாப்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்த இளைஞர் என்று அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நபர் படையினரின் பதில் தாக்குதல்களின் போது கொல்லப்பட்டவராவார்.

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள நேரத்தில் மேற்குறிப்பிடப்பட்ட வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் மேற்கொண்டுள்ளதுடன், படையினரும் பதில் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். மோதலின் பின்னர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலத்தைப் படையினர் கண்டுபிடித்துள்ளனர். அச்சடலத்தில் இருந்த கைக்கடிகாரம் புலிகள் அணியும் கடிகார ரகத்தைச் சேர்ந்தது என்பதுடன், இது தொடர்பாக விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### சென்னை நீதிமன்றம்

# மற்றுமொரு வழக்கில் நேற்று ஜெயலலிதாவுக்கு பிணை அனுமதி

## ஆனால் அவர்தொடர்ந்து சிறையில்!

சென்னை, டிச. 25

நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு மற்றொரு வழக்கில் நீதிமன்றம் நேற்று பிணை அனுமதி வழங்கியது.

அதே சமயம் அவருக்கு எதிராக மற்றும் இரண்டு வழக்குகளில் பிணை அனுமதி வழங்கப்படாததால் அவர் தொடர்ந்து விளக்க மறியலில் இருக்க வேண்டியுள்ளது.

சட்ட விரோதமான முறையில் மீனா விளம்பர நிறுவனத்துக்கு கட்டண சலுகை வழங்கியது, கொடைக்கானல் ஹோட்டல் கட்ட அனுமதித்தது ஆகிய வழக்குகளில் சென்னை அமர்வு நீதிமன்றம் நேற்று முன்தினம் அவருக்குப் பிணை அனுமதி வழங்கியது தெரிந்ததே.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளின் கொள்வனவில் எட்டரைக் கோடி ரூபா ஊழல் இடம் பெற்றதாகக் கூறப்படும் வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் நேற்று அவருக்கு பிணை அனுமதி வழங்கியது.

எனினும் நிலக்கரி பேர ஊழல், வருமானத்துக்கு அதிகமான அளவு சொத்துக்களைச் சேர்த்தமை ஆகியவை தொடர்பான வழக்குகளில் அவருக்கு பிணை அனுமதி வழங்க சென்னை அமர்வு நீதிமன்றம் நேற்று முன்தினம் மறுத்துவிட்டது. அந்த உத்தரவை எதிர்த்து அவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை சென்னை உயர்நீதிமன்றம் நேற்று ஜனவரி முதல் வாரத்துக்கு ஒத்தி வைத்துள்ளது. (உ-3)

## வவுனியாவில் மோதல்

கொழும்பு, டிச. 25

வவுனியா காவல் நிலையம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் மேலதிக இராணுவ உதவியுடன் முறியடிக்கப்பட்டதாக இலங்கை வானொலி அறிவித்தது.

அதிகாலை 1. 30 மணிக்கு ஆரம்பமாகிய இந்த மோதல் காலை 6. 45 மணி வரை நீடித்தது. (உ- 4)

## சிசுக்கள் பராமரிப்புப்பிரிவு இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், டிச. 25

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரசவ வாட்டில் இயங்கி வந்த நிறைகுறைந்த சிசுக்கள் பராமரிப்பு நிலையம் தற்போது அங்கிருந்து இடம் மாற்றப்பட்டுள்ளது.

இவ்வளவு நாள்களும் இப்பிரிவு பழைய பிரசவவிடுதியிலேயே இயங்கி வந்தது. (இ-15)


## ஆங்கில ஆசிரியர்களுக்கு

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் 1997 ஆம் ஆண்டு அனுமதிக்காக விண்ணப்பித்தவர்களில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்கள் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் உடன் தொடர்புகொள்ளவும்.

5/1 B, புனித வளன் கத்தோலிக்க
அச்சக ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(44316)